அடையாள இலக்கம்

E ☐ ☐ ☐ ☐ ☐ ☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2017

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி
# இளைஞர் பிரிவு

(15 – 17 வயதுப் பிரிவு)

பரீட்சைத் தாளை வாசிக்க வழங்கப்படும் நேரம்: 10 நிமிடங்கள்
வினாக்களுக்கு பதிலளிக்க வழங்கப்படும் நேரம்: 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்

**அனைத்து வினாக்களுக்குரிய பதில்களும் தமிழில் மட்டுமே எழுதப்படவேண்டும்.**

| பகுதிகள் | வினா வடிவம் | ஒதுக்கப்பட்ட நேரம் (அண்ணளவாக) | புள்ளிகள் | மதிப்பீட்டுப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| பகுதி 1 | கேட்டு பதிலளித்தல் | 30 நிமிடங்கள் | 20 | |
| பகுதி 2 | வாசித்து பதிலளித்தல் - பாகம் அ | 1 மணி 20 நிமிடங்கள் | 20 | |
| | வாசித்து பதிலளித்தல் - பாகம் ஆ | | 15 | |
| பகுதி 3 | கட்டுரை எழுதுதல் | 40 நிமிடங்கள் | 20 | |
| | | **மொத்தப் புள்ளிகள்** | **75** | |

| **மொத்தப் புள்ளிகள்** | |
|---|---|

# மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்:

1. இந்த பரீட்சை தாளில் கேட்கப்பட்ட அனைத்து வினாக்களுக்குரிய பதில்களும் தமிழில் மட்டுமே எழுதப்படவேண்டும்.
2. பதில்கள் யாவும் தரப்பட்ட பரீட்சை தாளில் எழுதப்படவேண்டும்.

## பகுதி 1: கேட்டு பதிலளித்தல் (20 புள்ளிகள்)

3. கேட்டு பதிலளித்தல் பகுதிக்குரிய வினாக்கள் **1 – 4**.
4. இவற்றிற்குரிய உரைப்பகுதிகள் நான்கும் இதே ஒழுங்கில் இடம்பெறும்.
5. நீங்கள் நான்கு உரைப்பகுதிகளையும் ஒவ்வொன்றாகச் செவிமடுப்பீர்கள். ஒவ்வொரு ஒலிப்பதிவும் இரண்டு தடவைகள் ஒலிபரப்பப்படும். முதலாவது, இரண்டாவது ஒலிபரப்புக்கிடையில் ஒரு சிறிய இடைவேளை விடப்படும். இரண்டு தடவைகளும் ஒலிபரப்பு முடிந்தவுடன் அந்த உரைப்பகுதிக்குத் தொடர்பாகக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு பதில் எழுதுக.
6. நீங்கள் எவ்வேளையிலும் குறிப்புகள் எடுக்கலாம்.
7. ஒவ்வொரு உரையாடலின் இறுதியிலும் அந்த உரையாடல் தொடர்பான வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு ஓதுக்கப்பட்ட நேரம் பற்றி அறியத்தரப்படும். அந்த நேரம் முடிந்தவுடன் அடுத்த ஓலிபரப்பு ஆரம்பிக்கும்.
8. பகுதி ஒன்றிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நேரம் அண்ணளவாக 30 நிமிடங்கள்.

## பகுதி 2: வாசித்து பதிலளித்தல் (மொத்தம் 25 புள்ளிகள்)

9. வாசித்து பதிலளித்தல் பகுதியில் இரண்டு பாகங்கள் உள்ளன.
10. **வாசித்து பதிலளித்தல் - பாகம் அ:** (20 புள்ளிகள்)

    இந்தப் பாகத்துக்குரிய வினாக்கள் **5 – 7.**
11. முதலாவது பாகத்தில் மூன்று விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து ஒவ்வொரு விடயத்தின் கீழும் தரப்பட்ட விடயம் தொடர்பான கேள்விகளுக்கு பதில் எழுதுக.
12. **வாசித்து பதிலளித்தல் - பாகம் ஆ:** (15 புள்ளிகள்)

    இந்தப் பாகத்துக்குரிய வினா இலக்கம் **8.**
13. இரண்டாவது பாகத்தில், தரப்பட்ட விடயம் சம்பந்தமான தகவல்களை உபயோகித்து கேட்கப்பட்ட கேள்விக்கு 150 சொற்களில் பதில் எழுதுக.
14. பகுதி இரண்டிற்கு ஒதுக்கப்படவேண்டிய நேரம் அண்ணளவாக 1 மணி 20 நிமிடங்கள்.

## பகுதி 3: எழுத்து (20 புள்ளிகள்)

15. இந்தப் பாகத்துக்குரிய வினாக்கள் **9 - 11**. இவற்றில் ஒன்றை தெரிவுசெய்து 250 சொற்களுக்கு குறையாமல் பதில் எழுதுக.
16. பகுதி மூன்றிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நேரம் அண்ணளவாக 40 நிமிடங்கள்.

## பகுதி 1: கேட்டு பதிலளித்தல்

### வினாக்கள் 1 – 4 (20 புள்ளிகள்)

நீங்கள் நான்கு உரைப்பகுதிகளை ஒவ்வொன்றாகச் செவிமடுப்பீர்கள். ஒவ்வொரு ஒலிப்பதிவும் இரண்டு தடவைகள் ஒலிபரப்பப்படும்.

ஒலிப்பதிவுகளை கவனமாகக் கிரகித்து அந்த உரைப்பகுதிக்குத் தொடர்பாகக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு பதில் எழுதுக.

புள்ளி | இந்தப் பகுதியை குறிப்புகள் எடுக்கப் பயன்படுத்தவும்

### உரைப்பகுதி 1

1. (அ) 'முத்தமிழ்க் கழகம்', தனது பெயரைப் பிரதிபலிக்கும் வகையில் விழாவில் எடுக்கும் நிகழ்வுகள் எவை? 3

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

(ஆ) மாலை நிகழ்வுகளைக் கண்டுகளிக்க விரும்பும் ஒருவர் எடுக்கவேண்டிய முன்னேற்பாடுகள் எவை? 2

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| **உரைப்பகுதி 2** | புள்ளி | இந்தப் பகுதியை குறிப்புகள் எடுக்கப் பயன்படுத்தவும் |
| 2. (அ) விமான நிலைய நிர்வாகம் பயணிகளிடம் என்ன உதவியை நாடுகின்றது? | 2 | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| (ஆ) என்ன விடயங்கள் அதி உச்சமாகக் கருத்தில் கொள்ளப்படுகின்றன? | 2 | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| **உரைப்பகுதி 3** | | |
| 3. (அ) சற்குருவினால் தமிழ் மக்கள் ஏன் பெருமைப்படவேண்டும்? | 1 | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| (ஆ) ஏன் சற்குரு தனது கண்டுபிடிப்புக்கான முழுப்புகழையும் ஏற்கவில்லை? | 3 | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| (இ) இந்த நிகழ்ச்சி சற்குருவின் இலட்சியத்தை அடைய எவ்வாறு உதவும்? | 1 | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |
| ----------------------------------------------------------------------------------- | | |

## உரைப்பகுதி 4

| | புள்ளி | இந்தப் பகுதியை குறிப்புகள் எடுக்கப் பயன்படுத்தவும் |
|---|---|---|
| 4. (அ) Ricky Ponting அதி சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதை செய்தியில் சொல்லப்பட்ட தரவுகளைக் கொண்டு நியாயப்படுத்தவும். | 2 | |

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

(ஆ) உரைப்பகுதியில் Ricky Ponting இன் சாதனைகளும், திறமையும் எவ்வாறு அவரொரு சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதை அடையாளப்படுத்தியுள்ளது? 4

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

**பகுதி 1 முடிவு**

## பகுதி 2: வாசித்து பதிலளித்தல் (மொத்தப் புள்ளிகள் 35)

### பாகம் அ: வினாக்கள் 5 - 7 (20 புள்ளிகள்)

5. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழேயுள்ள கேள்விகளுக்கு பதில் எழுதுக.

**விளையாட்டா, பொழுதுபோக்கா?**

இவ்வருடத்தின் தை மாதத்தில் மேசைப்பந்தாட்ட விளையாட்டு கழகம் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. 1973ம் ஆண்டு சரயேவோவில் (Sarayevo) இடம்பெற்ற ஐரோப்பிய வெற்றிக்கிண்ண போட்டியின்போது இருந்த பழைய துளிர்ப்பை மீண்டும் கொண்டு வருவதே இதன் நோக்கமாகும்.

இந்த விளையாட்டை பரந்த அளவில் கொண்டு செல்வதற்காக கழகம், பாடசாலை மேசைப்பந்தாட்டத்தை இளையோரிற்கும், பொழுதுபோக்கு மேசைப்பந்தாட்டத்தை சற்று வயது கூடியவர்களுக்கும் ஆரம்பித்துள்ளது. இந்த கழகத்தின் நோக்கம் மேசைப்பந்தாட்டத்தை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதோடு எல்லோரையும் ஆண்டு முழுவதும் பயிற்சி எடுக்கவைப்பதேயாகும்.

இக்கழகத்தின் முகாமையாளர் மெகோ டேர்க்கி கருத்து தெரிவிக்கையில் ''எமது இலட்சியம் மேசைப்பந்தாட்டத்தை சிறுவர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதோடு புதிய சாதனையாளர்களை இவ்விளையாட்டில் உருவாக்க வேண்டும்'' என்றார். அவர் மேலும் தொடர்கையில் இந்த சாதனையாளர்கள் நமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் பெரும் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் என்றார். 200 சதுர மீற்றர் அளவில் 40 அதிதரம் வாய்ந்த மேசைப்பந்தாட்ட மேசைகளைக்கொண்ட முதலாவது கழகம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்ல அதியுயர் ஐரோப்பிய தரத்தில் பேணப்படும் இக்கழகத்தில், தரமான உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இக்கழகம் தேர்ச்சிபெற்ற, நற்பெயருள்ள பயிற்சியாளர்களின் மேற்பார்வையில் சிறுவர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளது. இங்கு விளையாடும் போட்டியாளர்களில் ஒருவரான அஸ்ரா அக்மேற்றோவிக் 2011ம் ஆண்டு ஐரோப்பிய போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்றவர். இவர் கூறுகையில் 'இவ்விளையாட்டை பிரபல்யப்படுத்துவதுடன், ஆரோக்கியமான வாழ்வை வாழ்வதற்கும் இது நல்ல சந்தர்ப்பம் மட்டுமல்ல, எல்லா வயதினருடனும் பழகி, கூடிக்குலாவுவதற்கும் உதவும்' என்றார்.

**புள்ளிகள்**

5. (அ) 1973ம் ஆண்டின் முக்கியத்துவத்தை பந்தியிலிருந்து விளக்குக. **1**

----------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

(ஆ) விளையாட்டு வீரர்களைத் தவிர இக்கழகத்தினால் பயனடையப்போகும் ஏனையோர் யார்? **2**

----------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

(இ) விளையாட்டின் புத்துயிர்ப்பு போதிய கவனிப்பை பெற்றுள்ளது என்பதை எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? **2**

----------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

**6**. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழேயுள்ள கேள்விகளுக்கு பதில் எழுதுக.

## வெற்று பூச்சாடியும் பையனும்

முன்னொரு காலத்திலே ஒரு அரசன் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான். அவனது ஒரே குறை பிள்ளைகள் இல்லாததுதான். இதனால் அரசனும், அரசியும் நாட்டிலேயே நேர்மையான குழந்தையை தெரிவுசெய்து அக்குழந்தையை தாம் சுவீகாரம் செய்து கொள்வது என்று தீர்மானித்தனர். இதற்காக போட்டியொன்றை வைப்பதற்கு தீர்மானித்த அரசன் நாட்டிலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் பூ விதைகளை கொடுக்குமாறும், அதை நட்டு, வளர்த்து அதில் பூக்கும் அழகான பூவை எவர் கொண்டு வருகின்றாரோ அக்குழந்தையை சுவீகாரம் செய்யப் போவதாகவும் அறிவித்தான்.

ஆரசனின் அறிவித்தலின்படி அனைத்து குழந்தைகளிற்கும் பூ விதைகள் வழங்கப்பட்டன. அவர்கள் அனைவரும் அதனை நட்டு, காலை முதல் மாலை வரை கண்ணும் கருத்துமாக சூரிய ஒளி படுமாறு வைத்தனர். அவர்களில் ஒரு சிறுவனும் பூ விதைகளை நட்டிருந்தான். வழமையாக விதையிலிருந்து பூங்கன்று முளைப்பதற்கு 10 நாட்களே எடுக்கும், ஆனால் 15 நாட்கள் கடந்தும் சிறுவனின் பூ விதையிலிருந்து எதுவும் முளைக்கவில்லை. இதனால் கவலையுற்ற சிறுவன் தனது தாயிடம் ”ஏன் இன்னும் பூச்செடி முளைக்கவில்லை” என்று கேட்டான். கவலையுற்ற அந்த தாயும் “நீ அந்த விதையை வேறொரு சாடிக்குள் நட்டுப்பார்” என்றாள். அதன்படியே அச்சிறுவன் செய்த பொழுதும் எதுவும் முளைக்கவில்லை.

அரசனிடம் பூச்சாடியை கொண்டுசெல்லும் நாளும் வந்துவிட்டது. பூ மலர்ந்த பூச்சாடிகளுடன் எல்லாச் சிறுவர்களும் அழகான உடையுடுத்து அரண்மனைக்கு சென்றனர். இச்சிறுவனோ எதுவும் முளைக்காத வெறும் சாடியுடன் அழுதவண்ணம் அரண்மனையின் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தான். எல்லோரையும் பார்த்த அரசன் ஒரு மூலையில் அழுதவண்ணம் நின்ற சிறுவனை தன்னிடம் அழைத்து வருமாறு காவலாளிகளிடம் கட்டளையிட்டான். அவனது கட்டளைப்படி அழைத்து வரப்பட்ட சிறுவனிடம் ‘ஏன் நீ மட்டும் வெறும் பூச்சாடியுடன் நிற்கின்றாய்’ என்றான். மிகவும் பயந்து போன அச்சிறுவன் கவலையோடு, நான் விதைகளை நட்டேன், ஆனால் எதுவுமே முளைக்கவில்லை என்றான். அதை செவிமடுத்த அரசன் அச்சிறுவனை தன்னோடு அரவணைத்து இவன்தான் எனது நேர்மையான மகன் என்றான். வெறும் பூச்சாடி கொண்டுவந்த சிறுவனை ஏன் அரசன் தெரிவுசெய்தான் என்பதில் அனைவரிற்கும் ஆச்சரியம். உடனே அரசன் அதற்கான விளக்கத்தை கூறினான். நாங்கள் விநியோகம் செய்த அனைத்து விதைகளும் அவிக்கப்பட்ட விதைகள், அவை என்றுமே முளைக்கமாட்டாதவை என்றான். அங்கு நின்ற அனைத்து மக்களும் அரசனின் முடிவை ஆமோதித்தனர். அழகான பூச்செடிகளுடன் நின்ற அனைத்து சிறுவர்களும் வெட்கி தலை குனிந்தனர்.

**புள்ளிகள்**

6. (அ) இச்சிறுவன் எத்தகைய குணவியல்பு கொண்டவன்? இந்த உரைப்பகுதியிலிருந்து சான்றுகாட்டி குறிப்பிடுக: **2**

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

(ஆ) அழகான மலர்களை பார்த்தபொழுது அரசனின் மனதில் தோன்றியதை விபரிக்கவும். **2**

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

(இ) அரசனின் நோக்கம் என்னவாக இருந்தது? **1**

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

7. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழேயுள்ள கேள்விகளுக்கு பதில் எழுதுக

## அமெரிக்காவின் மூத்த குடிமக்கள்

நேற்று ஒரு தனியார் வங்கி வாசலில் நின்றுகொண்டிருந்தேன். ஒரு முதியவர் தனது காரை நிறுத்த முடியாமல் நடைமேடை மீது ஏற்றி நிறுத்தினார். அவருக்கு ஒரு எண்பது வயதிருக்கும். நான் புலனத்தில் மூழ்கியிருந்தேன். சற்று விழிப்பாக இல்லாவிட்டால் அந்த முதியவர் என் மீது காரை ஏற்றியிருப்பார். சாலையோரம் நின்றிருந்த காவலர்கள் பயந்துபோய் ஓடிவந்து அவருக்கு உதவி செய்தார்கள். கடந்தமுறை இங்கு நான் வந்தபோது பார்த்ததை விட இப்போது அதிகளவில் முதியவர்கள் இருப்பதை உணர முடிகிறது. இந்தத் தேசம் முழுக்க முதியவர்களின் எண்ணிக்கை அதிகம். குறிப்பாக நான் வேலை செய்யும் சுகாதார சேவைகள் நிறுவனம் வயதான முதியவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கும் நிறுவனம். அரசு நிறுவனம் என்பதால் முதியவர்களுக்கு தேவைப்படும் உதவிகளை இலவசமாக அல்லது மானியவிலையில் தருகிறார்கள். நான் வசிக்கும் பகுதியில் எங்கு பார்த்தாலும் முதியவர்கள்தான். முதியவர்களுக்கு அமெரிக்கா போன்று ஒரு நரகம் வேறு எதுவுமில்லை. பெரும்பாலும் பிள்ளைகள் பதினெட்டு வயதிற்குப் பிறகு தங்கள் சொந்த காலில் நின்று வேலை செய்வார்கள். பெற்றோர்கள் தங்கள் மரணம்வரை வேலை செய்யவேண்டும். அரசு தரும் உதவித்தொகை சொற்பம் தான். முதுமை, உடல்நலக்குறைவு தரும் தொந்தரவுகளோடு அல்லாடும் இந்த முதியோர்களுக்கு என்ன செய்வதென்று தெரியாது. எங்களூரில் இருக்கும் முதியவர்கள் இந்தவிடயத்தில் கொடுத்துவைத்தவர்கள். வசதி இல்லாவிட்டாலும் அவர்களைச் சுற்றி உறவினர்கள் இருக்கிறார்கள். நான் தங்கியிருக்கும் விடுதிக்கு அருகில் வசிப்பவர்களில் கணிசமானவர்கள் முதியவர்கள். காலையில் ஐந்து மணிக்கு எழுந்துவிடுவார்கள். வெளியில் பனி கொட்டிக்கொண்டிருக்கும். இவர்கள் தமது குடியிருப்பின் வரவேற்பறையில் அமர்ந்து தங்கள் வயதையொட்டிய மேலும் சிலருடன் ஏதாவது பேசிக்கொண்டிருப்பார்கள். சிலர் அருகிலிருக்கும் கடைகளில் பகுதிநேர வேலை செய்கிறார்கள். நிதானமாக காரை ஓட்டிக்கொண்டு வேலைக்கு வருவார்கள். இங்கு நிலவும் கடுமையான குளிரை தாங்கமுடியாமல் அநேக முதியவர்கள் குளிர் குறைந்த வேறு மாநிலங்களுக்கு சென்றுவிடுகிறார்கள்.

மரணத்தைவிடக் கொடுமையானது தனிமை. நேற்று அருகிலிருக்கும் ஓர் எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்குச் சென்றேன். என்னைப்போன்ற இன்னொரு இந்தியர் அங்கு வந்து ஏதோ கேட்டிருக்கிறார். அங்கு கடமையில் இருந்த ஒரு முதியவர், அவரைத் திட்டி அனுப்பிவிட்டார். என்னவென்று அவரிடம் கேட்டேன். ''சிகரெட் பெட்டி ஒன்றை எடுத்துக்கொண்டு பணம் கொடுப்பதற்குச் சென்றேன், அந்தப் பாட்டியம்மா என்னை பள்ளிக்கூட பையன் என்று நினைத்துக்கொண்டு அடையாள அட்டையைக் கேட்கிறார். நான் இருபத்திநான்கு வயதான கணினி பொறியியலாளர் என்று சொல்லியும் அவர் கேட்கவில்லை'' என்று அலுத்துக்கொண்டார். இந்தியர்கள் அமெரிக்கர்களை விட உருவத்தில் சிறியதாக இருப்பதால் அவர்கள் பெரும்பாலும் எம்மை பள்ளிக்கூட மாணவர்கள் என்று நினைக்கிறார்கள் போலும். அந்தப் பாட்டியம்மா பின்னர் எனக்கும் அறிவுரை வழங்கினார். ''சிறுவயதில் புகைபிடிப்பது உடல்நலத்துக்கு கேடு'' என்றார். ''நான் புகை பிடிப்பதில்லை, எனினும் உங்கள் ஆலோசனைக்கு நன்றி. எனக்கு இப்போது நாற்பது வயது ஆகிறது'' என்று சொல்லியும் நம்ப மறுத்துவிட்டார்.

இங்குள்ள வங்கிகள் முதல் சிறிய கடைகள் வரை முதியவர்கள் பகுதிநேரமாக வேலை செய்வதைப் பார்க்கமுடியும். பெரும்பாலும் அவர்கள் பொறுமையாக வேலை செய்வார்கள். நேற்று எனது அலுவலக நண்பருக்கு வங்கி கணக்கு தொடங்கச் சென்றேன். அரைமணிநேரம் ஆனது. அந்த அம்மா கீரை ஆயத்தான் சரிப்பட்டுவரும் என்று தோன்றியது. ''மன்னிக்கவும் எனது கணினியில் ஏதோ பிரச்சினை, உங்களைக் காக்க வைத்ததற்கு மன்னிக்கவும்'' என்று பத்து முறை எங்களிடம் மன்னிப்பு கேட்டுவிட்டார். வேறு வழியின்றிக் காத்திருந்தோம்.

நன்றி: விநாயக முருகனின் முகநூல் பதிவு – சிறிய மாற்றங்களுடன்

**புள்ளிகள்**

7. (அ) அங்குள்ள மூத்த குடிமக்கள் எவ்வழிகளில் தமது நேரத்தைச் செலவிடுகின்றனர்? **2**

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

(ஆ) அமெரிக்க முதியோர்களின் இயல்பு என்ன எனக் கருதுகிறீர்கள்? **2**

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

(இ) அமெரிக்க முதியோர்களையும் தமிழ் நாட்டு முதியோர்களையும் ஒப்பிடுக. **4**

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

(உ) ‘முதுமை கொடிது’ என்று ஆசிரியர் அங்கலாய்ப்பதன் காரணம் என்ன? 2

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

**பாகம் ஆ: வினா 8 (15 புள்ளிகள்)**

**8.** கீழே தரப்பட்ட தகவலை பயன்படுத்தி கேட்கப்படும் கேள்விக்கு 150 சொற்களில் விடை தருக:

**அவுஸ்திரேலியா தினத்தில் பழைய அரச மாளிகையைக் கண்டுகளிக்க ஒரு அரிய சந்தர்ப்பம்**

சிட்னி நகரில் எல்லோராலும் அறியப்பட்டதும், அழகானதுமான கட்டடங்களில் பழைய அரசாங்க மாளிகையும் ஒன்றாகும். பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டு தொடர்ந்த நூற்றாண்டுகளில் புனரமைக்கப்பட்டது இக்கட்டடம். இம்மாளிகை தனிச்சிறப்புடைய தன்மைகளையும், அழகிய சூழலையும் கொண்டுள்ளது. ஆனால் பழமையான கட்டடமாகையால் சிலவேளைகளில் ஈரப்பதத்தினாலும், துர்நாற்றம் வீசும் கழிவு நீரினாலும் அயலில் வசிப்பவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். நீங்கள் பார்த்த மிகவும் பழமை வாய்ந்த மாளிகைகளில் இதுவுமொன்று. அத்தோடு நகரின் உண்மையான சின்னம் இதுவென்றால் மிகையாகாது. நகரின் பழைய சுவரடியில் இம்மாளிகை கட்டப்பட்டுள்ளது. பதினைந்தாம் நூற்றாண்டின் தேக்கு மர விட்டங்களையும், கல்லினாலான சுருள் போன்ற படிக்கட்டுகளையும் கொண்டது இம்மாளிகை. இரண்டாம் உலகப் போரிற்குப்பின் கைவிடப்பட்ட இம்மாளிகை, அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டிருந்தது. அதன் பின்னர் முடிந்த அளவில் மாளிகையை புனரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இப்பொழுது ஒவ்வொருமுறையும் மக்கள் பார்வைக்கு மாளிகை திறக்கப்படும்பொழுது அவர்கள் நீண்ட வரிசையில் நிற்பதைக் காணலாம்.

8. பழைய அரச மாளிகையைப் பற்றிய விளம்பரத்தை மாதாந்த சஞ்சிகை ஒன்றில் வாசித்துள்ளீர்கள். உங்களுடைய நண்பர் ஒருவர் இது போன்ற பழமை வாய்ந்த மாளிகைகளை மிகவும் விரும்புபவர். அவுஸ்திரேலியா தினத்தில் இம்மாளிகையை பார்ப்பது மிகவும் சிறந்த யோசனை என்பதை வலியுறுத்தி அவரை ஊக்கப்படுத்தும் கடிதமொன்றை எழுதுக.

குறிப்புகள் எடுக்க இந்தப் பகுதியைப் பயன்படுத்தவும்

**கேள்வி 8**

பகுதி 2 முடிவு

வெற்றுத்தாள்

## பகுதி 3: எழுத்து வினாக்கள் 9 - 11 (20 புள்ளிகள்)

பகுதி மூன்றிற்கு ஒதுக்கபட்ட நேரம் அண்ணளவாக 40 நிமிடங்கள்

கீழே தரப்பட்ட மூன்று எழுத்து வடிவங்களில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்கு குறையாமல் பதில் எழுதுக.

**9.** சுற்றுப்புறச்சூழல் மற்றும் ஆரோக்கியமான வாழ்வு பற்றி மிகுந்த அக்கறை கொண்ட உங்களது நண்பர் ஒருவர் புதிய சைவ உணவகமொன்றை அண்மையில் திறந்துள்ளார். இவ்வுணவகம் பற்றி வாடிக்கையாளர்களை ஊக்கப்படுத்தி அவர்களை வரவழைக்கும் முகமாக உள்ளூர் சஞ்சிகைக்கு கட்டுரை ஒன்றை எழுதுக.

**10.** நீர் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றில் முதலாம் பரிசை வென்றுள்ளீர். இப்பணத்தில் உமது குடும்பத்திற்கும், நண்பர்களிற்கும் ஏதாவது செய்யவேண்டுமாவென யோசிக்கின்றீர். பரிசை வென்ற பின்னர் உமது எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் ஒரு வாரத்திற்கான தினக் குறிப்பேட்டினை எழுதுக.

**11.** சற்று மழை தூறிக்கொண்டிருந்தது, திடீரென இடி விழுந்தது போன்ற ஒரு பலமான சத்தம் கேட்கவும் வானத்தை அண்ணாந்து பார்த்தேன். கண்கள் கூசும் வெளிச்சம் ஒன்று தோன்றியது .............. என்று தொடங்கும் கற்பனைக் கதை ஒன்றினை எழுதுக.

| குறிப்புகள் எடுக்க இந்தப் பகுதியைப் பயன்படுத்தவும் |
| --- |
| |

**கேள்வி இலக்கம்:**

பகுதி 3 முடிவு

வெற்றுத்தாள்